இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 06-09-2023

# இந்தியாவை வழிநடத்தும் தளபதி

இந்தியாவை வழிநடத்தும் குரலை முன்மொழிந்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

இந்தியாவை வழிநடத்தும் முன்னணிப் படையாக திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே இருந்து வந்துள்ளது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இன்றைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்கு அகில இந்திய அளவில் இன்று சமூகநீதி காக்கப்பட மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டது. அதற்கான முதல் குரலை 1973 ஆம் ஆண்டே முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுப்பினார்கள்.

14.10.1973 அன்று அலகாபாத்தில் உத்தரப்பிரதேச மாநில பட்டியலின - பிற்படுத்தப்பட்டோர் மாநாடு நடந்தது. அதில் முதலமைச்சர் கலைஞர் பங்கெடுத்து உரையாற்றினார். தனது உரையின் முடிவில் இப்படிக் குறிப்பிட்டார் கலைஞர் அவர்கள்...

**“பட்டியலின பின் தங்கிக் கிடக்கின்ற சமுதாயத்திற்காக மத்திய அரசினர் இரண்டு முன்னெடுப்புகளை நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

*** மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப் பட்ட இடம் ஒழுங்காக முழுமையாக நிரப்பப் பட வேண்டும்.**

*** அது போல மத்திய அரசாங்கத்தினுடைய வேலை வாய்ப்புகளில் - இனி மேல் பின் தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இவ்வளவு இடம் என்று ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதையும் மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்”** என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை தான் பிற்காலத்தில் மண்டல் ஆணையத்தின் மூலமாக இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைத்தது.

இந்தியாவில் மாநில சுயாட்சிக்கான முதல் குரலை ஒரு மாநிலத்தின் சட்ட மன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலமாக வழிகாட்டியவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். முதலமைச்சர் ஆனதும் நடந்த முதல் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில், மாநில சுயாட்சிக் குரலை ஒலித்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். ‘முதலமைச்சர் ஆவதற்கு முன் இவர் டெல்லிக்கு வந்திருந்தாரா இல்லையா என்பதே தெரிந்து கொள்ள முடியாத ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் மாநில சுயாட்சியின் குரலை எதிரொலித்ததன் மூலமாக இந்தியாவின் கவனத்தைப் பெற்றார்’ என்று 1970 ஆம் ஆண்டு ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ ஏட்டில் பத்திரிகையாளர் என்.எஸ்.ஜே. எழுதினார். இதுதான் மாநில சுயாட்சித் தீர்மானமாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. அதற்கு முன் அப்படி ஒரு தீர்மானம் இந்தியாவில் எந்த மாநில சட்டமன்றத்திலும் நிறைவேற்றப்படவில்லை.

இதே போல் தான்,

**அவசர நிலை பிரகடனம் அமல்படுத்தப்பட்ட போதும், முதன்முதலாக ஒரு ஆளும் கட்சி எதிர்த்தது என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம் தான். இப்படி முன்னணிப் படையாக தி.மு.க. இயங்கியது. இப்போதும் இயங்கி வருகிறது.**

**நீட் விலக்கு மசோதா, குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு - மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிர்ப்பு - என இந்தியாவை அழிவுப்பாபாதைக்கு அழைத்துச் செல்லும் திட்டங்களுக்கு மிகக்கடுமையான எதிர்ப்பை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவு செய்து வருகிறார்கள். இப்போது அவர், ‘இந்தியாவுக்காக பேசத் தொடங்கி’ இருக்கிறார்.**

SPEAKING FOR INDIA - **என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது குரலானது இந்தியா முழுமைக்கும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது.**

ஆறாவது முறையாக கழகத்தை ஆட்சியில் அமர வைத்து 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாகக் கொடுத்த வாக்குறுதிகளில் 75 விழுக்காட்டுக்கு மேல் இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவேற்றிக் காட்டி - அறிவிக்காத பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி வருபவர் அவர்.

இன்றைக்கு இந்தியாவே வியந்து பார்க்கும் ஆட்சியாக தமிழ்நாடு அரசு இருந்து வருகிறது.

இத்தகைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக முக்கியக் கட்சியின் தலைவராக இருக்கும் அவர் இப்போது இந்தியாவுக்காகப் பேச வந்திருக்கிறார்.

இந்தியாவுக்காக அனைவரும் பேசியாக வேண்டிய நெருக்கடியில் இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகவே இந்த குரல் பதிவுத் தொடரை அவர் தொடங்கி இருக்கிறார்.

இந்திய நாடு இப்போது ஆபத்தில் இருக்கிறது. காலம் காலமாக நாம் போற்றிப் பாதுகாத்து வந்த ஒற்றுமை உணர்வு என்ற தத்துவத்தைச் சிதைப்பதன் மூலமாக இந்தியாவையே சிதைப்பதற்கு பாரதிய ஜனதா கட்சி முயற்சிக்கிறது. 2014 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பாரதிய ஜனதாக் கட்சி தேர்தலுக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

*** வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்ட இந்தியர்களின் கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஆளுக்கு 15 லட்சம் தருவோம்.**

*** ஆண்டு தோறும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவோம்.**

*** விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்கு ஆக்குவோம்.**

*** இந்திய நதிகளை எல்லாம் இணைப்போம்.**

*** சொந்த வீடு இல்லாதவர்களே இருக்க மாட்டார்கள்.**

*** இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக மாறும்**

- இப்படி பூமியையே புனிதமாக்கிவிடுவோம் -

வானத்தையே வளைத்துவிடுவோம் - என்றெல்லாம் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அன்றைய குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் நரேந்திரமோடி அவர்கள் சொன்னார்கள். பத்து ஆண்டுகள் ஆகப் போகிறது. எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ஆனால் இந்திய ஒற்றுமையை சிதைக்கப் பார்க்கிறார்கள். எனவே தான் இந்திய நாட்டைச் சேர்ந்த அனைவரும், இந்தியாவைக் காக்க இந்தியாவுக்காக பேச வேண்டியதாக உள்ளது. அத்தகைய குரலை முன்மொழிந்திருக்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் இந்த உரை வெளியாகி இருக்கிறது. அனைத்து மொழியிலும் மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தனை பரவத் தொடங்கி இருப்பது தான் பலரை அதிர்ச்சி அடைய வைக்கிறது. ‘இந்தி’ மொழி பேசுபவர்கள் தான் அதிகம் அறிய வேண்டும். அங்கே தெளிவு பிறக்க வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது குரல் என்பது இந்தியாவுக்கான குரல்.

SPEAKING FOR INDIA **இந்தியாவுக்காகப் பேசுவோம்.**

**இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்போம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.9.2023) தலைமைச் செயலகத்தில், சுயநிதி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மூலம் தொழில்முறை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை ஒழுங்குபடுத்தவும் /கண்காணிக்கவும் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் கே.கல்யாணசுந்தரம் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### சனாதனம் குறித்து பேசிய விவகாரம்:

# என் தலை சீவ ரூ.10 கோடி எதற்கு? பத்து ரூபாய் சீப்பு போதும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதிலடி

**தூத்துக்குடி, செப். 6 -**

**சனாதனம் குறித்து பேசிய விவகாரத்தில் என் தலைக்கு ரூ.10 கோடி என சாமியார் ஒருவர் தெரிவித்து உள்ளார். ‘என் தலையை சீவ ரூ.10 கோடி வேண்டாம். பத்து ரூபாய் சீப்பு போதும்’ என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிலடி கொடுத்து உள்ளார்.**



சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதை திரித்து, இந்துக்களுக்கு எதிராக பேசியதாக பா.ஜ.வினர் அவதூறு பரப்பி வருகின்றனர். இதற்கு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து உள்ளனர். இதற்கிடையே, சனாதனம் குறித்து பேசிய அமைச்சர் உதயநிதி அவர்கள் தலைக்கு ரூ.10 கோடி என அயோத்தியைச் சேர்ந்த பரஹாம்ச ஆச்சாரியா என்ற சாமியார் அறிவித்துள்ளார். இதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிலடி கொடுத்து உள்ளார்.

தூத்துக்குடியில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு கழக முன்னோடிகளுக்கு தலா பத்தாயிரம் வீதம் பொற்கிழிகளை வழங்கி பேசியதாவது:-

சென்னையில் சனாதன எதிர்ப்பு மாநாடு நடந்தது. இதில் வாழ்த்தியா பேச முடியும். எதிர்ப்பாகதான் பேச முடியும். அதே போல கடந்த 2 நாட்களாக எங்கு பார்த்தாலும் சனாதனம் என்ற வார்த்தை தான் கேட்கிறது. ஒட்டுமொத்த இந்தியாவும் என்னுடைய பேச்சை பற்றித்தான் பேசிக்கொண்டு இருக்கிறது.

உத்தரபிரதேசத்தில் ஒரு சாமியார் எனது தலைக்கு விலை வைத்துள்ளார். யார் எனது தலையை சீவிக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு ரூ.10 கோடி ரூபாய் பரிசு தொகை பேசியுள்ளார்.

எனக்கு எதற்கு 10 கோடி. பத்து ரூபாய் சீப்பு கொடுத்தால் நானே என் தலையை சீவிக்கொண்டுபோய்விடுவேன்.

கலைஞரையும் இவ்வாறு தான் மிரட்டினார்கள். அவரது தலைக்கும் விலை வைத்தார்கள். அவரது தலையை சீவிக் கொண்டு வந்தால் ஒரு கோடி தருவதாக கூறினார்கள். ஆனால் தலைவர் கலைஞர் சொன்னார்; “என் தலையையே என்னாலே சீவ முடியாது. இன்னொருத்தனா வந்து சீவப் போகிறான்” என்றார். நான் கலைஞரின் வழியில் வந்தவன். இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன்.

சனாதனம் என்றால் பெண்கள் வெளியில் செல்ல முடியாது. மேலாடை அணிவதற்கு அனுமதி கிடையாது என்பது போன்ற அடக்குமுறைகள் இருந்தன. இந்த சனாதன கொள்கையை ஒழிக்க வேண்டும் என்று கூறினேன்.

ஆனால் பா.ஜனதா பொய்யை பரப்புகிறார்கள். இனப்படு கொலையை தூண்டுவதாக பரப்புகிறார்கள். குஜராத், மணிப்பூரில் இனப்படுகொலையை செய்தது பா.ஜ.தான். பல மாநிலங்களில் என் மீது புகார்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு திரிப்பு!

## பா.ஜ.க.வுக்கு காங்கிரஸ் பதிலடி!

*புதுடெல்லி, செப். 6 -*

*அமைச்சர் உதயநிதியின் பேச்சு பற்றி காங்கிரஸ் வாய்திறக்க வேண்டும் என்று பா.ஜ.க. அமைச்சர்கள் கூப்பாடு போட்ட பின்னணியில், அமைச்சர் உதயநிதியின் சனாதனம் தொடர்பான விமர்சனம் குறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் பதில் அளித்துள்ளார்.*

*டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,*

*“ஒவ்வொரு கட்சிக்கும் கருத்து சொல்ல சுதந்திரம் உண்டு” என்றார். “எங்கள் பார்வை தெளிவாக உள்ளது. ‘சர்வ தர்ம சமபவ’ (அனைத்து மதங்களுக்கும் மரியாதை தருவது) என்பது காங்கிரஸின் சித்தாந்தம். ஆனால், ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல சுதந்திரம் உண்டு. அந்த வகை யில் அனைவரின் நம்பிக்கைகளையும் நாங்கள் மதிக்கிறோம்” என்று கூறினார்.*

*இதனிடையே, கர்நாடக காங்கிரஸ் அமைச்சர் பிரியங்க் கார்கேவும், “சமத்துவத்தை வளர்க்காத அல்லது மனிதனாக மதிக்க கற்றுக் கொடுக்காத எந்த மதமும் என்னைப் பொறுத்தவரை மதம் அல்ல. மக்களை சமத்துவத்துடன் நடத்தாத எந்த மதமும் ஒரு நோயைப் போன்றது தான்” என்று பா.ஜ.க.வுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.*

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! இந்த 9 ஆண்டுகளில் பிரதமர் மோடி அவர்கள் ஒரு நாள் கூட லீவு எடுக்கவில்லையாமே ?

**பெரியதம்பி :** ஆமாம்; **அப்படித் தான் குறிப்பிட்டுள்ளது பிரதமர் அலுவலகம்.**

**மூன்று மாத காலமாக மூண்டெழும் நெருப்பில் வெந்து கருகிக் கொண்டிருக்கும் மணிப்பூர் பிரச்சினையை, அண்மையில் பாராளுமன்றம் நடந்து கொண்டிருந்த போது, எதிர்க்கட்சிகள் நாள்தோறும் எழுப்பி, பிரதமர் அவைக்கு மதிப்பளித்து, அங்கே வந்து, நாட்டு மக்களுக்கு உரிய விளக்கம் அளித்திட வேண்டும் என்று, ஒருமித்த கோரிக்கை வைத்துக் குரல் எழுப்பியதை, சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாமல் - அவைக்கே வராமல், தவிர்த்துத் தயக்கம் காட்டினாரே, அந்த நாட்கள் எல்லாம், அவர் கடமை ஆற்றியதாக எடுத்துக் கொள்ள முடியுமா? லீவில் இருந்ததாகத்தானே அர்த்தம் !**

**அதைப் போல, அதானி விவகாரம் அமர்க்களமான போதும் அப்படித்தானே நடந்து கொண்டார் !**

**அந்த நாட்களையும், பிரதமர் தமது கடமையை ஆற்றாமல், லீவு எடுத்ததாகவே கொள்ள முடியும் !**

**எனவே லீவே எடுக்காத பிரதமர் என்ற பிதற்றலில் உண்மை இல்லை !**